ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/18 - 2018 මැයි මස 15 වැනි අඟහරුවාදා - 2018.05.15

*2071/18 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்***

மேல் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்

*மேல் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவர் இறப்பெய்தியமை காரணமாக, அம்மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளாராதலாலும் ;*

*அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஜனநாயகக் கட்சியின் செயலாளர் மேற் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் கீழ் தகைமையுள்ள ஆளொருவரை பெயர் குறிக்குமாறு தேர்தல்கள்ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;*

*மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. ஜனக்க குருப்பு என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி, திரு. ஜனக்க குருப்பு என்பவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான கம்பஹா நிருவாக மாவட்டத்திலிருந்து மேலேயுள்ள மாகாண சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தவிசாளர்,*
*தேர்தல்கள் ஆணைக்குழு.*

*என். ஜே. அபேசேகர,*
*அங்கத்தவர்,*
*தேர்தல்கள் ஆணைக்குழு.*

*எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,*
*அங்கத்தவர்,*
*தேர்தல்கள் ஆணைக்குழு.*

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
*2018*, மே 15.

*06-83*

1A - G 27632— 27 (2018/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*